சிறப்பிதழ்
Special Issue

2-ஆடி 2050
18-July 2019

ISSN : 2321-0737

பல்கலைக் கழக மானியக் குழு அங்கீகாரம் பெற்றத் தமிழ்ப் பன்னாட்டு ஆய்விதழ்
UGC APPROVED INTERNATIONAL THAMIZH JOURNAL

UGC Journal No.40719

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandrasegaran*

*Editorial Board*
*Dr. S. Kumaran*
*Dr. Oppila Mathivanan*
*Dr. R. Rajagopal*
*Dr. Aranga. Pari*
*Dr. P.M. Jamahir*
*Dr. S. Rajaram*
*Dr. R. Velmurugan*
*Dr. S. Chitra*
*Dr. E.R. Ravichandran*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. K. Thilagavathi*
*Dr. P. Velmurugan*
*Dr. G. Sheik Meeran*
*Dr. P. Selvakumar*
*Dr. M. Karunanithi*
*Dr. A. Kaleel Rahman*
*Dr. A. Senthil Kumar*
*Dr. S. Tamil Velu*
*Dr. M. Arunachalam*
*Dr. R.Vijayarani*
*Dr. V. Dhanalakshmi*
*Dr. S. Ramesh*
*Dr. J. Chandrakala*
*Dr. C. Prabhakaran*
*Dr. P. Santhi*
*Prof. Balasundaram Elayathamby*
*Dr. A. Thoufiq Rameez*
*Dr. S. Bharathi Prakash*
*Dr. J. Raja*
*Dr. J. Selva Kumar*
*Dr. D. Alagudurai*
*Dr. Chandrika Subramaniyan*
*Dr. Manivannan Murugesan*
*Dr. V. Kalathi*
*Mr. G. Senthil*

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)
(கலை & மனிதவியல்)

# Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)
(Arts & Humanities)

சிறப்பிதழ் : பன்னாட்டுக் கருத்தரங்கம் -2019
தமிழ்த்துறை (தன்நிதி)
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)
பொள்ளாச்சி - 642 001, தமிழ்நாடு, இந்தியா.

## தமிழ் இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**
முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா
உதவிப்பேராசிரியர்

பதிப்புக்குழு உறுப்பினர்கள்
முனைவர் த. பரமேஸ்வரி (துறைத்தலைவர்)

முனைவர் த. கீதாஞ்சலி   முனைவர் ந. பிரகாஷ்   முனைவர் இரா. ஜெயந்தி
முனைவர் ம. சித்ரகலா   முனைவர் மு. சுகந்தி   பேரா. ர. சூர்யா   பேரா. அ. மகபுபூ
தமிழ்த்துறை (தன்நிதி), நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி), பொள்ளாச்சி -6

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

4 பகுதி-2 சிறப்பிதழ் Special Issue

| | | | |
|---|---|---|---|
| 95. | ந. வெங்கடேஷ் | திருக்குறளில் மனித மாண்புகள் | 346-348 |
| 96. | சு.நளினி | சங்கப் பாடல்களில் மனிதநேயம் | 349-351 |
| 97. | சௌ. மைதிலி | மணிமேகலை உணர்த்தும் மனிதநேயம் | 352-355 |
| 98. | ஜோ. ஜீவா | மனித நேய நோக்கில் மலர்வதியின் 'காத்திருந்த கருப்பாயி' நாவல் | 356-358 |
| 99. | டு. ஜோஸ் விஜி | நீலபத்மநாபன் கவிதைகளில் மனிதநேய மாண்புகளின் இழப்பு | 359-362 |
| 100. | B.S.ஆஷா | குறுந்தொகையில் திணைசார் மக்களின் மனித நேய மாண்புகள் | 363-365 |
| 101. | அ.மகபூபூ, | சிலப்பதிகார மாந்தர்களின் மனிதநேயமாண்புகள் | 366-369 |
| 102. | பொ.மா.பழனிசாமி | தமிழ் இலக்கியத்தில் மனிதநேய வாழ்வியல் மதிப்புகள் | 370-374 |
| 103. | பா.அருள்ஜோதி | சங்க புறப்பாடல்களில் மனித நேய சிந்தனைகள் | 375-379 |
| 104. | ம.சித்ரகலா | சுந்தரகாண்டத்தில் மனிதநேய மாண்புகள் | 380-385 |
| 105. | அமுதன் | இலக்கியத்தில் மனித நேயம் தமிழ் இலக்கியங்களை முன்வைத்து | 386-389 |
| 106. | S.Jagadambal & Dr. K. Perumal | Spirituality Fosters Humanity | 390-393 |
| 107. | டாக்டர். சு.பிரசாத் & செ.சண்முகவடிவு | சித்தர் இலக்கியங்களில் மனிதநேயம் | 394-399 |
| 108. | த. மகிலா ஜெனி | விவேக சிந்தாமணியில் மனித நேயம் | 400-403 |
| 109. | த.ரதீஸ் | இலக்கியத்தில் மனிதநேயம் | 404-407 |
| 110. | ர.மாலதி ரவீந்திரன் | சங்க இலக்கியங்களில் மனிதநேயம் | 408-410 |
| 111. | திருமதி.க.தேவி | இலக்கியங்களில் மனிதநேயச் சிந்தனைகள் | 411-416 |
| 112. | ந.ஜெயசுதா | இலக்கியங்களில் மனிதநேயம் | 417-419 |
| 113. | இரா.ஜெயந்தி | திருக்குறள் காட்டும் மனிதநேயக் கருத்தாக்கம் | 420-423 |
| 114. | க. உஷா | திருக்குறளும் மனித மாண்புகளும் | 424-427 |
| 115. | D. ஞானசௌந்தரி | கீதைகூறும்ஞானம் | 428-432 |
| 116. | க.முத்துஇலக்குமி | பாரதியார் கவிதைகளில் மனிதநேயப்பண்பு | 433-436 |
| 117. | க.தனலட்சுமி | தமிழ் இலக்கியங்களில் மனிதநேயம் | 437-439 |
| 118. | பொ.வீரசித்திவிநாயகன் | இலக்கியங்களில் திருக்குறள் உணர்த்தும் மனிதநேயமும் மருத்துவமும் | 440-442 |
| 119. | மு.சுகந்தி | புறநானூற்றுப் பாடல்களில் மனிதநேயம் | 443-446 |
| 120. | த.பரமேஸ்வரி | புதுக்கவிதைகள் உணர்த்தும் புரையோடிய மனிதநேயம் | 447-450 |
| 121. | பேரா ர.சூர்யா | மனிதநேயச் சிந்தனைகள் | 451-453 |
| 122. | மு.அபிநயா | கருவறைவாசனையில் பெண்ணுலகம் | 454-456 |
| 123. | ஜோதிமணி.து | காட்டுக்குட்டியில் மாண்டுபோகும் மனிதநேயம் | 457-460 |
| 124. | இரா.விஷ்ணுப்பிரியா | புலமையும் மனிதநேயமும் | 461-469 |
| 125. | திலகவதி பு | புகழேந்தி புலவர் இயற்றிய நல்லதங்காள் கதையில் மானுடம் | 470-473 |

# சித்தர் இலக்கியங்களில் மனிதநேயம்

செ.சண்முகவடிவு,
முனைவர் பட்ட ஆய்வாளர், உதவிப்பேராசிரியர், என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

டாக்டர். சு.பிரசாத்
நெறியாளர், உடற்கல்வி இயக்குனர், அரசு கலைக்கல்லூரி, பரமக்குடி,
இராமநாதபுரம் மாவட்டம்.

## முன்னுரை:

மனம் + இதன் = மனிதன். மனதை இதமாக வைத்துக் கொள்பவன் மனிதன். மனிதனை மனிதனாக அடையாளம் காட்டுவது மனிதநேயப் பண்பாகும். இம்மனிதநேயமே மனித இனத்தை விலங்கினத்திலிருந்து பிரித்துக்காட்டும் எல்லைக்கோடுகளில் ஒன்றாக உள்ளது. மனிதநேயம் பகுத்தறிவின் விளைவாகத் தோன்றக்கூடியது. பகுத்தறிவின் விளைவாகத் தோன்றும் மனிதநேயமே சமூகப் பயன் நல்கக்கூடியது. மனித சமுதாயம் மொழியினால், பழக்கவழக்கங்களினால், கலாச்சாரத்தினால் பல்வேறு வேறுபாடுகளைத் தனக்குள்ளே கொண்டிருந்த போதும் மனிதநேயம் என்ற மகத்தான பண்பினால் ஒன்றுபட்டு நிற்கின்றது. நாம் அனைவரும் ஒற்றுமையுடனும், அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ்வதற்கு நம் ஒவ்வொருவரிடத்திலும் மனிதநேயம் மலர வேண்டும். இத்தகைய மனிதநேயம் சிறக்க சித்தர்கள் காட்டும் வாழ்வியல் நெறிகளான அன்பு நெறி, ஆசை சீரமைத்தல், சினம் தவிர்த்தல், ஓரிறைக் கோட்பாடு, உடலோம்பல், பிறஉயிரைக் கொல்லாமை, பசிப்பிணி போக்கல், சாதி மத மறுப்புக் கொள்கை ஆகியவை குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

## மனிதநேயம்:

மனிதன் தன்னை அறிதலோடு, பிறரையும் நேசித்து அவர்களோடு அன்புபாராட்டி அவர்களுக்கு உற்றுழி உதவுகிற நற்பண்பையே மனிதநேயம் எனலாம். மனிதநேயம் என்பது நாடு, இனம், மொழி என்ற எல்லைகளைக் கடந்து நிற்பது. மனித இனத்தின் நாகரிகப் பண்பாட்டுடன் புனைந்து நிற்பது. பிறஉயிர்களை நேசிப்பதற்கும் இம்மனிதநேயப் பண்பே அடிப்படையாக அமைகிறது. உயிரின் ஒருமைப்பாட்டிற்கும், மனிதஇன வளர்ச்சிக்கும், சமுதாய மேம்பாட்டிற்கும் இப்பண்பே அடித்தளமாக அமைவதால் இதனை சித்தர்கள் வாழ்வியல் நெறிகளாகக் கண்டுணர்ந்தனர்.

## சித்தர்-சொல் விளக்கம்:

சித்தர் என்னும் சொல்லிற்கு "ஞானம் கைவரப் பெற்றவர்" எனப் பொருள் கொள்ளப்படுகிறது. சித்தம் என்பது மனமாகும். தன்னிச்சையாகத் திரியும் மனதினை அடக்கி, அதனை இறைவனிடம் செலுத்துகின்றவர்கள் சித்தர்கள் ஆவர். கடவுளைக் காண முயற்சிப்பவர்களைப் "பக்தர்கள்" என்றும் கண்டு தெளிந்தவர்களைச் "சித்தர்கள்" என்றும் தேவாரம் கூறுகிறது. அறியாமை அகற்றும் ஆசிரியர்களாக, நோய் தீர்க்கும் மருத்துவர்களாக, அறமுரைக்கும் சான்றோர்களாக, அறிவியல் அறிஞர்களாக, பொய்மை களைந்திடும் புரட்சியாளர்களாக பல சித்தர்கள் வாழ்ந்திருக்கின்றனர்.

## சித்தர்களின் கொள்கை:

சித்தர்கள் மக்களின் சமுதாய வாழ்வில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். இவர்கள் மூடநம்பிக்கைக்கு இடந்தராதவர்கள்.

சடங்குகளையும், சடங்குகளோடு கூடிய வழிபாடுகளையும் அறவே வெறுத்தனர். கடவுள் பெயர்கள் பலவாராக இருப்பினும் "இறைவன் ஒருவனே" என்ற கொள்கையை வலியுறுத்தினர். உயிர்களிடத்து அன்பு செலுத்துதல், பொய் கூறாது உண்மையை கைக்கொளல், இறைவனை வணங்குதல் ஆகியவற்றால் ஏற்படும் பயன்களை மக்களிடம் எடுத்துரைத்தனர். பாடுபட்டு ஈட்டிய பொருளைத் தவறான வழிகளில் செலவிடுகின்ற மக்களையும், பரத்தையர் செயல்களையும் இவர்கள் கண்டிக்கின்றனர். நல்லொழுக்கமுடைய பெண்களைப் போற்றுகின்றனர். சாதிகள் பிறப்பினால் தோன்றவில்லை, செய்கின்ற தொழிலுக்கேற்ப பிரிக்கப்பட்டிருக்கின்றன எனக் கூறுகின்றனர்.

சித்தர்கள் மூடப்பழக்க வழக்கங்களின் மூச்சுக்காற்றை நிறுத்தி விழிப்புணர்வுடன் கூடிய மனித உரிமைகளைச் சுவாசிக்க முயற்சி செய்தனர். இவர்கள் மக்களிடையே ஒருமித்த சிந்தனைகள் வளர வேண்டுமென எண்ணியவர்கள். மனிதநேயம் மலர தமது சிந்தனைகளை சமுதாயக் கோட்பாடுகளாக வடிவமைத்து நெறிமுறைகளை உருவாக்கினர்.

அன்பு நெறி:

மனித மனங்களிலிருந்து வெளிப்படும் தூய அன்பே மனிதநேயத்திற்கு அடிப்படையாக அமைகிறது. அன்பை வலியுறுத்தாத சமயங்களே இல்லை. அன்பின் முதிர்ச்சியே இறைநிலை. அன்புடையோர் மனமே இறைவன் வீற்றிருக்கும் ஆலயம் எனக் குதம்பைச் சித்தர் கூறுகின்றார்.

அன்பு வேறு, சிவம்(இறைவன்) வேறு என்று பிரித்துப்பார்க்காமல் அன்புதான் சிவம் என்பதை அறிந்து கொண்டால் எப்போதும் பேரானந்தத்தில் மிதக்கலாம் என்பதனை திருமூலர்,

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே
(திருமூலர்)

என்ற தனது பாடல் மூலம் விளக்குகிறார். அன்பில்லாதவர்கள் பேரின்பம் அடைய முடியாது மனித சமுதாயத்திற்கு வாழ்வையும், வளமையையும் பெருக்கித் தருவது அன்பு மட்டுமே. ஆகவே இவ்வுலகில் மனிதநேயம் சிறக்க எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்ற கருத்தை வெளிப்படுத்துகின்றனர் சித்தர்கள்.

ஆசை சீரமைத்தல்:

ஒழுக்கக்கேடுகள் அனைத்திற்கும் காரணமாயிருப்பவை முறையற்ற ஆசையும் செருக்கும். ஆசையை சீரமைத்தால் சிறப்பாக வாழ முடியும். சித்தர்களின் தத்துவமும் இதனை உணர்த்துகின்றது. மனித ஆசைகள் அனைத்தையும் மூன்று நிலைகளில் காணலாம். அவை மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்பன. இம்மூன்று ஆசைகளிலிருந்து மனித சமூகம் விடுபட வேண்டும்.

தோன்றாசை மூன்றும் தொடர்ந்துவந்து சுற்றாமல்
ஊன்றாசை வேரையடி யூடறுப்ப தெக்காலம்.
(பத்தரகிரியார்)

என்பார் பத்தரகிரியார்.

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்
(திருமூலர்)

என்பது திருமூலரின் பொன்னான வரிகள்.

ஆசை அறுத்தோர்க்கே ஆனந்தம் உண்டென்ற
ஓசையைக் கேட்டிலையே குதம்பாய்
ஓசையைக் கேட்டிலையோ (குதம்பை)

என்ற பாடல் மூலம் ஆசையைத் துறந்தவர்களுக்கே பேரின்பம் கிட்டும் என்பதை எடுத்துரைக்கின்றார் குதம்பைச் சித்தர்.

ஆசையே இறைவனைக்காணத் தடையாக இருப்பது. ஆசையை ஒழித்தால் இறைவனின் திருவருளைப் பெறலாம். மனிதர்கள் ஆசையை சீரமைத்துக் கொண்டு, தனது செயல்களை ஒழுங்குபடுத்தி மண்ணுலகிற்கு பயனுள்ள வாழ்க்கை வாழ வேண்டமென்று சித்தர்கள் வலியுறுத்துகின்றனர்.

சினம் தவிர்த்தல்:

சினம் என்பது அதனைக் கொண்டவனை மட்டுமல்ல மற்றவர்களையும் அழிக்கும். ஒருவன் தன்னைக் காக்க வேண்டும் என்றால் வெகுளாமை வேண்டும் என்பார் திருவள்ளுவர். கோபம், பொறாமை, கடுஞ்சொல் இவை பாவத்திற்கு காரணம். அதனால் கோபப்படுதல் கூடாது என்பதனை,

கோபம் பொறாமை கொடுஞ்சொல் வன்கோள் இவை
பாபத்துக்கு ஏதுவடி குதம்பாய்
பாபத்துக்கு ஏதுவடி. (குதம்பை) என குதம்பைச் சித்தர் கூறுகின்றார்.

வெற்றிகளைத் தேடித்தருகிறது என்பதற்காக கூட சினத்தை ஆதரிக்கக்கூடாது. சினத்தைத் தவிர்த்து, இயன்றவரை மனத்தை நல்லவழியில், மேலான சிந்தனையில் செலுத்த வேண்டும் என்கின்றார் திருமூலர். இதனையே,

வெல்லும் அளவில் விடுமின் வெகுளியைச்
செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை (திருமூலர்)

என்ற தனது பாடல் மூலம் விளக்குகின்றார். மனிதனை அழிக்கும் பலவகையான தீய குணங்களுள் முதன்மையானது சினம். அது மனித வாழ்வையே சீரழித்து விடுகிறது. ஆகவே சினத்தை விட்டொழித்துவிட்டால் நாம் வாழ்வில் வெற்றியடையலாம் என்கின்றார் இடைக்காடர்.

உடலோம்பல்:

உடலை நல்ல உணவு, நல்ல எண்ணம், போதிய ஓய்வு, ஏற்ற உழைப்பு முதலியவற்றால் காப்பாற்றுதலே உடலோம்பல் என்பதாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் உடல்நலம் என்பது மிகமிக இன்றியமையாதது. உடல்நலத்தோடு இருந்தால்தான் தியானத்தின் மூலம் இறைவனை நாம் உணர முடியும். இதனையே திருமூலர்,

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்...." என்றும்,

உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று

உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே (திருமூலர்) என்றும் கூறுகின்றார்.

நாம் உடல்நலத்தோடு இருந்தால்தான் நமது கடமையை சரிவர ஆற்றுவதோடு மற்றவர்களுக்கும் வேண்டிய உதவியை செய்ய முடியும். ஆகவே உடல்நலம் காத்தல் என்பது சுயநலமன்று, அதுவும் ஒருவகையான மனிதநேயப் பண்பே ஆகும்.

பிற உயிரைக் கொல்லாமை:

மற்ற உயிர்களையும் தன் உயிர்போல் கருதுவது மனிதப்பண்பாகும். பிற உயிரைக் கொலை செய்வது என்பது மிகவும் கொடிய செயலாகும். அதிலும் பிறஉயிரைக் கொன்று அதனை உணவாகக் கொள்வது மனிதநேயத்திற்கு புறம்பானது என்கின்றனர் சித்தர்கள். தீய உணவான பிறிதோர் உயிரின் உடலை உண்ணும் கீழ்மக்களை எமன் நரகத்தில் தள்ளிவிடுவான் என மக்களுக்கு எச்சரிக்கை ஊட்டுகிறார் திருமூலர்.

பொல்லால் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இயமன் தன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே

(திருமூலர்) என்று திருமூலர் உயிர்க்கொலை செய்யும் பாதகர்களை வன்மையாகக் கண்டிக்கிறார்.

பத்தரகிரியார், இவ்வுலகில் உள்ள சில உயிரினங்களைக் கொன்று, அவற்றின் இறைச்சியை உண்டு வாழாமல் ஏனைய உயிர்கள் அனைத்தையும் தன்னுயிர்போல் எண்ணிக் கொல்லா நோன்பை முடித்து வீடுபேறு அடைவது எக்காலம்? என்பதனை,

"மன்னுயிரைக் கொன்று வதைத்து உண்டு உழலாமல் தன்னுயிர்போல் எண்ணித் தவம்முடிப்பது எக்காலம்?(பத்தரகிரியார்) எனப் பாடுகின்றார்.

கொல்லாமை என்பது மிகச்சிறந்த அறநெறி. சித்தர்கள் அனைவருமே கொல்லாமையை மிகவும் வற்புறுத்துகின்றனர். கொல்லாமையே அவர்களின் உயிர்க்கொள்கை.

"எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி
இரங்கவும் - நின்
தெய்வ அருட்கருணை செய்யாய்
பராபரமே" என்றார் தாயுமானவர்.

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன்" என்றார் வள்ளலார்.

இத்தகைய ஆன்றோர்களின் கூற்றால் கொல்லாமை என்பது எத்தகைய உயர்ந்த நெறி என்பது புலனாகும். எனவே கொல்லாமை என்ற உயர்நெறியைப் பின்பற்றி மனிதநேயம் மலரச் செய்வது நமது கடமையாகும்.

**பசிப்பிணி போக்கல்:**

இவ்வுலகில் உள்ள அனைத்து உயிர்களும் உயிர் வாழ்வதற்கு அடிப்படைத் தேவையாக இருப்பது உணவாகும். ஆகவேதான் உயிர்களின் பசித்துன்பத்தைப் போக்குவதை பண்டைய காலம் முதல் இக்காலம் வரை ஓர் அறச்செயலாகக் கருதுகின்றனர்.

ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின் பார்த்து இருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின் போற்றன்மின் (திருமூலர்) என்கின்றார் திருமூலர். ஏழைகளுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் தம்மிடம் இருந்தால் உணவளிக்க வேண்டும். ஒருவருக்கு உணவளிக்கும் செயல் அவர்க்கு உயிரையே அளிப்பது போன்றதாகும் என்கின்றார் கொங்கணர்.

இவ்வுலகில் பசியால் வாடும் உயிர்களுக்கெல்லாம் அவ்வுயிர்களின் பசியாற உணவிட்டவர்கள் அனேக கோடி ஆண்டுகள் மிகவும் நலமாக வாழ்வார்கள் என்பதனை,

"அன்னம்இட்ட பேரெலாம் அநேக கோடி வாழவே" என்ற பாடல் மூலம் குறிப்பிடுகின்றார் சிவவாக்கியர்.

"வீடுதோறிரந்தும் பசியுறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்"
என்றும்

"பட்டினியுற்றார் பசித்தவர் களையால் பரிதவிக்கின்ற னரென்றே

ஒட்டிய பிறரால் கேட்டபோதெல்லாம் உளம் பகீரென நடுக்குற்றேன்" என்றும் வள்ளலார் குறிப்பிட்டுள்ளார். வறுமையற்ற சமுதாயமாக மனித சமுதாயத்தை வாழவைக்க வேண்டுமென்பதையும், பசியின் கொடுமையைப் போக்கி மக்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்பதையும் வள்ளலார் மனிதநேயமாகக் கருதினார்.

**சாதி மத மறுப்புக் கொள்கையும், ஓரிறைக் கோட்பாடும்:**

சித்தர்கள் இறைநம்பிக்கை கொண்டவர்கள். இறைவன் ஒருவனே என்ற

கோட்பாடு உடையவர்கள். அவர்களுடைய கடவுள் சிந்தனை நோக்கு சமயத்திற்கு அப்பாற்பட்டது. அது சமய எல்லையைக் கடந்து மக்களினத்தை ஒருமைப்படுத்த முனைகிறது. தெய்வம் ஒன்றுதான் என்பதனை,

**ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமனில்லை நாளுமே**
(திருமூலர்) என்ற பாடல் மூலம் தெளிவுபடுத்துகிறார் திருமூலர்.

சாதிவெறியும், மதவெறியும் ஒன்றுக்கொன்று துணைபோகும் இரட்டைப்பிள்ளைகள். சாதிகளையும் மதங்களையும் சித்தர்கள் கண்டித்தும் வெறுத்தும் ஒதுக்கும்படி பல பாடல்களைப் பாடியுள்ளனர்.

பால் என்பது ஒரே மூலப்பொருள். பாலின் பல்வேறு வடிவங்களே தயிர், மோர், வெண்ணெய், நெய் போன்றவை. அதுபோல இறைவன் ஒருவனே, அவனே எல்லா உயிர்களிலும் நீக்கமற நிறைந்துள்ளான். இவ்வாறு இருக்கையில் நீ உயர்ந்த சாதி, நீ தாழ்ந்த சாதி என சாதிகளின் பெயரால் சண்டையிடுவது ஏன்? என்பதை கொங்கணர்,

**சாதி பேதங்கள் சொல்லுகி றீர் தெய்வம்**
**தானென் றொருவுடல் பேதமுண்டோ?**
**ஓதிய பாலதி லொன்றாகி யதிலே**
**உற்பத்தி நெய்தயிர் மோராச்சு.** (கொங்கணர்)

என்ற பாடல் மூலம் மக்களுக்கு தெளிவுபடுத்துகின்றார்.

சிவவாக்கியரின் பல பாடல்கள் பல தெய்வக் கோட்பாட்டைக் கண்டனம் செய்கின்றன. இறைமை ஒன்று என அவர் வலியுறுத்துகின்றார்.

**ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே உலகனைத்தும் ஒன்றுமே**
**அன்றுமின்றும் ஒன்றுமே அனாதியான தொன்றுமே** (சிவவாக்கியர்)

எங்கள் தெய்வம் உங்கள் தெய்வம் என்றிரண்டு பேதமோ
உங்கள் பேதம் அன்றியே உண்மை இரண்டும் இல்லையே (சிவவாக்கியர்)

சாதி, சமயம், நாடு, இனம், பால் முதலிய எவ்வித வேற்றுமையும் அற்ற ஒரு சமுதாயம் உருவாக வள்ளலார் திருவுளம் விரும்பியது. பசிக்கொடுமை, போக்கொடுமைகளை ஒழித்து "உயிர்கள் பொது" என்ற ஒருலக சமுதாயத்தை உருவாக்கவே வள்ளலார் சமரச சுத்த சன்மார்க்கம் என்ற அமைப்பை நிறுவினார். வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கை மதங்கடந்தது மனிதநேயத்தையும், உயிர்கள் நேயத்தையும் மூச்சாகக் கொண்டது. இறைவனின் பெயரால் ஏற்படுகின்ற மதவெறி ஓய்ந்து மனிதநேயம் மலர வேண்டுமெனில் இறைவன் ஒருவனே என்ற உண்மையை மக்கள் உணர வேண்டும். சித்தர்கள் அருளிய ஞான மார்க்கத்தை பின்பற்றுவதன் மூலம் சாதி, மதம் கடந்த மனிதநேயம்மிக்க சமுதாயத்தை உருவாக்க முடியும்.

## முடிவுரை:

மேற்கண்ட பல்வேறு பாடல்களின் மூலம் சித்தர்களின் மனிதநேயம் நமக்கு நன்கு புலப்படுகிறது. தனிமனித வாழ்வையும், சமுதாய அமைப்பையும், சமயங்களின் போக்கையும் நெறிப்படுத்தி அமைதி பொங்கும் சமநிலைச் சமுதாயம் காண முற்பட்ட சித்தர்களை சமுதாயச் சிற்பிகள் என்றே கருதிட வேண்டும். தனிமனித உணர்வுகள் நல்லனவாக இருந்தால் சமுதாய அமைதியும் நலவாழ்வும் தானே அமையும். தனிமனித உணர்வுகளைச் செம்மைப்படுத்த சித்தர்கள் காட்டும் வாழ்க்கை நெறி துணைபுரியும். சித்தர்கள் காட்டிய வாழ்க்கை நெறியைப் பின்பற்றி உணர்வுகளைச் சமப்படுத்தியும், உடலை வளப்படுத்தியும்

மனிதநேயத்தோடு கூடிய நலவாழ்வு வாழ்வோமாக! வாழ்க வளமுடன்!

துணைநூற்பட்டியல்:


1. தமிழ்ப்பிரியன். இரா - பதினெட்டு சித்தர்களின் பாடல்களும் விளக்கங்களும் -நர்மதா பதிப்பகம் - 10, நானா தெரு, தி. நகர், சென்னை-17.
2. நாராயணன், டாக்டர். க - சித்தர் தத்துவம் - மாரி பதிப்பகம், சிவகலை இல்லம், கொட்டுப்பாளையம், புதுச்சேரி-8 - இரண்டாம் பதிப்பு-ஆகஸ்டு, 1990.
3. கட்டளை கைலாசம், முனைவர். வே - சித்தர்தத்துவமும் வேதாத்திரியமும் - மல்லி பதிப்பகம், மல்லிகை இல்லம், 64, வசந்தம் காலனி, மகாராஜநகர்-627 011 - முதற்பதிப்பு-2016.
4. வாசுதேவன், முனைவர். கா - பன்முக நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு - தேவன் பதிப்பகம், 16/43, திருநகர், திருவானைக்கோவில், திருச்சி-5 பதினோராம் பதிப்பு-2016.


❖❖❖